**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.87/2020 தேதி- 09.02.2026
(D.W.1) - ஜெயதாஸ்

<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI படித்துள்ளேன். நான் வழக்கறிஞர் எழுத்தாளராக பணிந்து வருகிறேன். இந்த வழக்கின் வாதியின் வீடு என்னுடைய வீட்டிற்கு அருகாமையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சி-பட்டிகை சொத்தை வாங்குவதற்கு முன்பே என்னுடைய வீடும் வாதியின் வீடும் அதே பகுதியில் இருந்து வருகிறது என்றால் சரிதான். இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வாதி தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். 2ஆம் பிரதிவாதியான என்னுடைய சகோதருக்கும் சேர்த்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு அதிகார பத்திரம் ஏதும் எழுதிக்கொடுக்கவில்லை. 20.05.2009 ல் ஆவண எண்.1379/2009 ன் படி கோமதி என்பவரிடம் இருந்து விலைக்கு வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அதன் விஸ்திரணம் என்ன என்றால் 5.182 சென்ட் சொத்தாகும். மேற்சொன்ன சொத்தை நான் கைவசம் வைத்து கரம் செலுத்தி அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சி-பட்டிகை சொத்தை பொது பாதையாக அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

2. மேற்சொன்ன சொத்தை பல நபருக்கு வழிப்பாதை உரிமையாக ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எத்தனை நபருக்கு வழிப்பாதையான ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் 6 நபருக்கு எழுதிக்கொடுத்துள்ளேன். வழக்கு சி-பட்டிகை சொத்தை தான் வழிப்பாதையாக 6 நபருக்களுக்கும் அவகாசமாக எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன 6 நபருக்கு அவகாசம் எழுதிக்கொடுத்த பிறகு என் பெயரில் கரம் செலுத்தி கைவசம் வைக்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. ஆவண எண்.1380/2009 உள்ள சொத்து சி-பட்டிகை சொத்தின் ஒரு பகுதி என்றால் இல்லை அது தனி சொத்தாகும். 1.380 சென்ட் சொத்திற்கு பாதை அவகாசம் இவ்வழக்கின் சி-பட்டிகை சொத்து வழியாகதான் செல்கிறது என்றால் சரிதான். ஆவண எண்.1381/2009 ன் படி 1.216 சென்ட் சொத்தை செல்லத்துரை என்பவர் கோமதி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1.216 சென்ட் சொத்து வாங்கும் போது எந்த வழிப்பாதையும் 4 பக்க எல்கையில் எந்த குறிப்பும் ஏற்படுத்தபடவில்லை என்றால்

சரியல்ல. மேற்சொன்ன ஆவணத்தில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. பாதை அவகாசம் எழுதிக்கொடுத்துள்ளேன். சி-பட்டிகை சொத்தை சுற்றி உள்ள எத்தனை நபர்கள் வீடு வைத்து வழிப்பாதையாக அனுபத்து வருகிறார்கள் என்றால் 6 நபருக்கு எழுதிக்கொடுத்துள்ளேன், 4 நபர்கள் வீடு வைத்துள்ளார்கள், 2 காலி மனையாக உள்ளது.

3. சி-பட்டிகை சொத்தின் வழியாக தான் 4 நபர்களுக்கு குடிநீர் வசதி மற்றும் மின் இணைப்பு பேரூராட்சி வழங்கியுள்ளது என்றால் சரிதான். ஆனால் பேரூராட்சி அனுமதி ஏதும் வழங்கவில்லை. சாதாரணமாக வீடு அமைக்க அனுமதி கோரும் போது பாதை வசதி இல்லாத எந்த இடத்திற்கும் பேரூராட்சி அனுமதி வழங்கப்படாது என்றால் சரிதான். சி-பட்டிகை சொத்தில் பாதை அனுமதி வழங்கியுள்ளதால் தான் அதன் அடிப்படையில் வீடு அமைக்க பேரூராட்சியில் அனுமதி வழங்கியுள்ளது என்றால் மேற்சொன்ன 6 நபருக்கு எழுதிகொடுத்த பாதை அவகாசத்தின்படி பாதை அனுமதி வழங்கப்பட்டது.